**மொறட்டுவ பல்கலைக்கழகம் - 2023**

----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பெறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.5.1 செலுத்த வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவர்களுக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 1,900,172 பெறுமதியான 175 காசோலைகள் மீண்டும் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகள் 2023 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அந்த மீதிகளை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பொறுப்புகளை தீர்ப்பதற்கு செயற்திறனான வேலைத்திட்டமொன்று நிறுவப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டுவரப்படும் செலுத்த வேண்டிய மாணவர் உதவித்தொகை மற்றும் புலமை பரிசில் கொடுப்பனவு ரூபா 1,719,675 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் எதிர்காலத்தில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பொறுப்புகளை தீர்ப்பதற்கு செயற்திறனான வேலைத்திட்டமொன்று நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்கலைக்கழகத்தினால் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் கொள்வனவு செய்யப்பட்ட மூலதன பொருட்களுக்கு உரிய பிடிக்காசு ரூபா 1,044,385 கூட்டுத்தொகை மற்றும் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட்ட 03 ஒப்பந்தங்களின் பட்டியல்களை தீர்க்கும் போது நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 2,429,936 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து நிறுத்தி வைக்கப்பட்ட தொகைகள் குறித்து விசாரணை நடத்தி, எதிர்காலத்தில் பணத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கடனைத் தீர்ப்பதற்கு திறமையான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2019 ஜுலை 29 ஆம் திகதிய 04/201 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கை கடிதம் | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா 1,902,499,871 தொகையான முதலீடுகள் மற்றும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 690,173,492 தொகையான முதலீடுகளுக்கு உரிய விடய பொறுப்பு அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை . | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் ஊடாக நிதியமைச்சரின் அனுமதியைப் பெறுவதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால் நிதிக் குழுவின் சிபாரிசு மற்றும் நிர்வாக சபையின் அனுமதியின் பேரில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன. | நிதிச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | (i) 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23(அ) பிரிவு | விடுதிகளில் கழிவு நீரை சுத்திகரிப்பதற்கு ரூபா 36,770,496 கிரயமான 03 நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டு சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த | சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றுச்சூழல் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும், அதற்கு சுற்றாடல் அனுமதி பத்திரம் 2024 பெப்ரவரி மாதம் வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | சட்டத்தின் அதிகாரங்களின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சரால் வெளியிடப்பட்ட 2022 ஜனவரி 27 ஆம் திகதிய 2264 /17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் திறன் வரம்புகள் தொடர்பான III (அ) ஆம் பட்டியல். | விடுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து அகற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் திறன் வரம்புகளுக்கு உட்படுவதை உறுதிப்படுத்தும் மாதிரி பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாது அதற்கு அருகே அமைந்துள்ள பொது கால்வாய்க்கு கழிவுநீர் திறந்துவிடப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் சரியான முறைப்படி செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும். | சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் பொருத்தமான திறன் வரம்புகளுக்குள் இருப்பதை உறுதிப்படுத்த அவ்வப்போது மாதிரி சோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 211 | 02 வருடங்கள் முதல் 08 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபா 2,113,993 பெறுமதியான கடன் கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இது குறித்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, பட்டியல்கள் மற்றும் தர அறிக்கைகள் பெற்று உரிய தொகையை செலுத்த அறிவுறுத்தப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைகுழு மற்றும் உயர்கல்வி மற்றும் கல்விக்கான தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றை உறுதிப்படுத்தாது மீளாய்வாண்டுக்கு ரூபாய; 1,986,839,051 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றை பதிவு செய்வதன் மூலம் அவர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் பயனுள்ள சேவையை | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடைவது கடினம். எவ்வாறாயினும், அனைத்து கல்வி சாரா ஊழியர்களின் வருகை பதிவேடுகள் சம்பளம் செலுத்தும் போது கல்விப்பிரிவு மற்றும் பிரிவுகளின் தலைவர்களிடமிருந் து பெறப்பட வேண்டும் என்பது. | |
| (உ) | 2022 ஜனவரி 03 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் 4(ii) ஆம் பந்தி | 2013 ஆம் ஆண்டு முதல் வாசிகசாலையின் வருடாந்த புத்தக மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி, புத்தகக் கணக்கெடுப்புப் பணிகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2023 ஜனவரி 18 ஆம் திகதிய BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க திறைசேரி செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரி இடப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தின் 5 பந்தி | பிணைமுறிகளை மீறிய 20 பேராசிரியர்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 45,696,764 தொகையை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பிணைமுறிகளை மீறியமையால் அறவிடப்பட்ட தொகை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களின்படி பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளது என்பது. | சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 293,469,333 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 86,759,504 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 206,700,829 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசிடமிருந்து கிடைத்த மீண்டெழும் மானியம் ரூபா 254,000,000 இனால் மற்றும் மூலதன மானியம் மற்றும் வெகுமதிகள் ரூபா 76,156,048 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான 12 பேர்ச் பரப்பளவான காணி 50 வருட காலமாக குத்தகை உடன்படிக்கையின் கீழ் ரூபா 1,400,000 தொகையான ஆரம்ப கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு 2009 அக்டோபர் மாதத்தில் பல்கலைக்கழகத்திற்கு சுவிகரிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் காணியின் அபிவிருத்தி பணிகள் உடன்படிக்கை திகதியிலிருந்து இரண்டு வருடங்களில் நிறைவு செய்ய தவறினால் குத்தகை உடன்படிக்கை தன்னியக்க முறையில் இரத்தாகி காணியின் உரித்தானது குத்தகை உரிமையாளருக்கு உரித்தாகவதாக உரிய நிபந்தனை பல்கலைக்கழகத்தினால் மீறப்பட்டுள்ளமையால் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் இந்த காணி வேறு நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து இந்த பணத்தைப் மீள பெற்றுக் கொள்ளல் தொடர்பில் நிச்சயமற்ற நிலை ஒன்று காணப்பட்டது. | இது தொடர்பாக மேலும் நினைவூட்டல் கடிதம் அனுப்ப மற்றும் பின்தொடர்வதன் மூலம் அந்த தொகையை அறவிடுவதற்கு அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்படும். | இந்த தொகையை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிணைமுறிகளை மீறிய 36 பேராசிரியர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 173,752,491 ஆகும். அதில் 21 வருடங்கள் முதல் 30 வருட காலமாக முன் கொண்டு வரப்படும் இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,156,268 தொகை மற்றும் 31 முதல் 41 வருட காலமாக முன்கொண்டுவரப்படும் 09 | இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | பிணைமுறியை மீறிய பேராசிரியர்களிடமிருந்து இந்த பணத்தை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து அளவிடப்பட வேண்டிய ரூபா 5,826,865 தொகையும் காணப்பட்டது. | | |
| (இ) | மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கு தேவையான பேராசிரியர் அலகுகளின் பிணியாய்வு பயிற்சியானது 2025 ஜனவரி மாதமளவில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தற்போது பிணியாய்வு பயிற்சி வழங்கப்படும் நாகொட மருத்துவசாலையில் அந்த வசதிகள் இல்லாதிருந்தமையால், 2023 நவம்பர் 15 ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழு மற்றும் அதற்கு முன்னர் வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் இந்த பிணியாய்வு பயிற்சிகளுக்கு நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையை பயன்படுத்துவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த பரிந்துரைகள் 2024 ஏப்ரல் மாதம் வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2025 ஜனவரி மாதம் நெவில் பெர்னாண்டோ மருத்துவமனை இந்த பேராசிரியர் அலகுகளை கொண்ட அரச மருத்துவமனையாக நடத்திச் செல்வதற்கு தவறினால் மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கு உரிய காலப்பகுதியினுள் மருத்துவப் பட்டத்தினை பெற்றுக்கொள்வதில் மிகுந்த அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க நேரிடும். | இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு 2024.05.17 ஆம் திகதி சனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதன்போது நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையை சுவீகரிப்பதற்கு மற்றும் அதன் பணிகளை ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் ஆரம்பிப்பதற்கும் கல்வி நடவடிக்கைகளை சைட்டமில் மேற்கொள்வதற்கு உரிய வசதிகள் மற்றும் நிதி ஏற்பாடு வழங்குவதற்கு இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளமை. அமைய அந்தப் பணிகளை தடையின்றி மேற்கொண்டால் 2025 ஜனவரி அளவில் இறுதி ஆண்டு மாணவர்களின் பிணியாய்வு நடவடிக்கைகள் தொடர்பில் சிக்கல் ஒன்று ஏற்படாது என்பது. | இறுதி ஆண்டு மாணவர்களின் பிணியாய்வு பயிற்சிகளுக்கு தேவையான வசதிகளை துரிதமாக தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் அறிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 83,577,700 தொகையான 66 நீண்ட கால ஆராய்ச்சிகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே அவற்றுள் 2016 ஆம் ஆண்டினுள் அங்கீகரிக்கப்பட்ட ரூபா | நிறைவு செய்ய தாமதமான ஆராய்ச்சி மானிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | ஆராய்ச்சி மானியங்களை திறம்பட பயன்படுத்த ஒரு திறமையான வேலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 4,112,000 தொகையான 06 ஆராய்ச்சி மானியங்களும் காணப்பட்டன. | | |

### 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாகப் பணிகளுக்கு தொடர்புடைய உயர் மட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டமைந்த யூனி கன்சல்டன்சி சர்வீசஸ் கம்பனி நிறுவப்பட்டு பல்கலைக்கழக வளாகத்தினுள் நடத்திச் செல்லப்படுவது தொடர்பில் 2014 நவம்பர் 20 ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழு கலந்துரையாடலின் பிரகாரம் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2024 மே மாதம் வரையிலும் அவ்வாறானதொரு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதறகு தேவையான தகவல் ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை அங்கீகாரம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

### 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக திணைக்களத்தின் அபிவிருத்தி நிதியம் மற்றும் பாடநெறி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் கீழ் காணப்படும் 91 நிதிய கணக்குகளின் ரூபா 264,698,078 தொகையான மீதியொன்று காணப்பட்டது. 15 நிதியங்களில் காணப்பட்ட ரூபா 5,602,090 தொகையானது 07 வருடங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்தத் திணைக்கள அபிவிருத்தி நிதியத்திற்குரிய பணம் சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்களத்தினால் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பல்வேறு பாடநெறி ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளிலிருந்து பெறப்படும், மேலும் அந்த நிதி ஓராண்டு அல்லது பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தாலும், அவை எதிர்காலத்தில் தொடர்புடைய பணிகளுக்கு பயன்படுத்தப்படும். | பல்கலைக்கழகத்தின் தேவைகளுக்கு உரிய நிதியை திறம்பட பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 06 வெகுமதி நிதியங்களுக்கு ரூபா 1,127,010 தொகையான பெறுவனவுகள் உள்ளடங்களாக மீளாய்வாண்டின் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 22,056,082 தொகை குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | இந்த நன்கொடை நிதியங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்து தேவையான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிதியை நோக்கத்திற்குரிய நடவடிக்கைகளுக்கு திறம்பட பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக 3 முதல் 13 வருட காலமாக நிலவும் ரூபா 19,386,959 பெறுமதியான 27 புலமைப்பரிசில் நிதியங்களில் இருந்து எந்த புலமைப்பரிசிலும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த புலமைப்பரிசில் நிதி வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போதைய சூழலுக்கு ஏற்ற வகையில் புதிய அளவுகோல்களை உருவாக்கி, இந்த நிதியத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கட்டுப்பாட்டு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நீண்ட காலமாக செயலிழந்து காணப்படும் 22 பரிசில் நிதியங்களின் ரூபா 3,356,683 கூட்டுத் தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி விருதுகள் மற்றும் புலமை பரிசுகள் (Awards & Scholarship Account) எனும் பெயருடைய புதிய நிதிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த நிதியத்தில் இருந்து புலைமை பரிசில்களை வழங்குவதற்கு தேவையான அளவுகோள்கள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிராமையால் அத்திகதியில் நிலவிய ரூபா 13,791,376 தொகையான மீதியை பயன்படுத்த முடியாதிருந்தது. | புலமைப்பரிசில் செலுத்துவதற்கு அளவுகோல்களை நிர்ணயிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அளவுகோல்களை உடனடியாக உருவாக்கி, நிதியத்தை திறம்பட பயன்படுத்த வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டினுள் மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,850,097 பெறுமதியான 340 டோனர் மற்றும் காற்றீச் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. | இந்தக் களஞ்சியசாலையில் உள்ள டோனர் காட்ரிஜ்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுச் சபையால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய இந்த இருப்பு தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | குழுவின் அறிக்கையை உடனடியாக பெற்று, பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | விடுதியின் கூரை சேதமடைந்து அபாயத்திற்கு உரியதாக காணப்பட்டமையால் நீண்ட காலமாக அந்த விடுதி மூடப்பட்டிருந்ததுடன் புதிய விடுதி | இந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | பராமரிப்புப் பணிகளை துரிதமாக நிறைவு செய்து மாணவர்களுக்கு |

| | | |
|---|---|---|
| தொகுதியின் இரண்டாவது மாடியில் கூரை சேதமடைந்து அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலைமையில் காணப்பட்டமையால் தளத்தின் 24 மாணவர்கள் தங்கக்கூடிய 06 அறைகள் மூடப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றின் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் மூலம் 86 மாணவர்களுக்கு ஒரே தடவையில் விடுதி வசதிகளை வழங்கக்கூடிய விடுதி அறைகளை பிரிக்காது மண்டபம் போன்று காணப்பட்டதுடன் ஏனைய பொது வசதிகளும் போதுமானதாக இல்லாது இருந்தமையும் அடிப்படையில் விடுதி வசதிகளை பெற்றவாறு இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 12 ஆகும். | என்பது. | போதிய விடுதி வசதி செய்து தர ஏற்பாடு செய்ய வேண்டும். |

## 3.5 செயற்திட்டம் அல்லது மூலதன பணிகளிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் மாணவர் சிற்றுண்டிச் சாலையில் இருந்து வெளியேற்றப்படும் உணவு கழிவுகளின் முகாமையின் மூலம் உயிரியல் வாயு உற்பத்தி செய்யப்பட்டு, அந்த வாயு சிற்றுண்டிச்சாலையின் உணவு சமைப்பதற்கு பயன்படுத்தும் செயல்திட்டம் ஒன்றுக்காக 2017 பிப்ரவரி 22 ஆம் திகதி வரையிலும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு உயிரியல் வாயு உற்பத்தி செய்யும் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டிருந்தது. அந்த செய்யப்படும் உயிரியல் வாயுவின் அளவானது சிற்றுண்டிச் சாலையின் அடுப்புகளை எரிய வைக்க போதுமானதாக இல்லாத இருந்தமையால் வாயு கட்டமைப்பின் இயலலவினை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் கட்டமைப்பின் இயலவினை அதிகரித்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட புனரமைப்புச் செலவினம் ரூபா 1.5 மில்லியன் என சம்பந்தப்பட்ட பேராசிரியர் தெரிவித்துள்ளார். இதன்படி, இத்திட்டத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளை உரிய அனுமதிகளுக்கு உட்பட்டு அமுல்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். | இத்திட்டத்தின் சீரமைப்பு பணிகளை தாமதமின்றி முடிக்க வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் போது முதலாம் கட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த வாஸ்து விஞ்ஞான பீடத்தின் கட்டிடத்தின் மற்றும் பொறியியல் இடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தின் கூரைகளின் தகரங்கள் அந்த கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு முன்னரே துருப்பிடித்து நீர் கசிவடைந்த காரணத்தால் அவற்றை அகற்றி மீண்டும் தகரங்களை இடுவதற்கு ரூபா 14,056,253 மேலதிக கிரயம் செலவிடப்பட்டிருந்தது. இந்த பணத்தை மதியுரை சேவைகளை வழங்கிய நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதியுரை நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் சான்றிதழில் மூலம் பணிகள் திட்டமிட்டபடி நிறைவு செய்யப்பட்டுள்ளமை உறுதி செய்துள்ளது. பல்கலைக்கழகத்திற்கு ஏற்படும் மேலதிக செலவுகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் அலட்சியத்தால் ஏற்பட்டுள்ளதெனின், அவர்களிடமிருந்து மேற்படி தொகையை மீளப்பெறுவது தொடர்பில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் விசாரித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | தரமற்ற கட்டுமானங்களால் ஏற்படும் இழப்பை மதிறுரைச் சேவை நிறுவனங்களிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டின் போது பொறியியல் பீடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்திற்கு உரிய ஒப்பந்த ஆவணத்தின் கூரையை அமைப்பதற்குரிய அமைப்பு குறிப்பீட்டின் பிரகாரம் வெப்பம் மற்றும் ஒலி ஆகியவற்றுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய சிங்க் அலுமினியத்தினால் மூடப்பட்ட தகரத்தினால் அமைக்கப்பட்ட கூரையொன்று திட்டமிடப்பட்டு அதற்காக ரூபா 6,000,000 ஒதுக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் அதன் எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதற்கு கையளிக்கப்பட்ட புதிய ஒப்பந்தத்தின் கீழும் புதிய கூரை ஒன்றுக்கு ஒலி தடையொன்று (Sound barrier) விடுவதற்காக ரூபா 5,356,600 செலுத்தப்பட்டிருந்தது. அதற்மைய ஆரம்ப அமைப்பு குறிப்பிடுகளின் பிரகாரம் ஒலித் தடையொன்று உரிய நியமத்தின் படி மேற்கொள்ளாது எஞ்சிய பணிகள் ஒப்பந்தத்தின் கீழ் மீள செலுத்தப்பட்டு | ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட மில்லி மீட்டர் 16 Plywood sheet இடுவதற்கு பதிலாக அதற்காக நியமத்துடனான Zn/Al தகரம் இடுவதற்கு பல்கலைக்கழகத்தினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கட்டிடத்தினை பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் இந்த உருப்படிகள் உரிய நியமத்தின் பிரகாரம் நிறைவு செய்யப்பட்டிருந்ததாக மதியுரை நிறுவனத்தின் சான்றிதழின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தினால் கட்டிடம் பொறுப்பேற்கப்பட்டது. இரண்டாம் கட்டத்திற்காக மதிப்பீட்டினை தயாரிக்கும் போது அந்த மதியுரை நிறுவனத்தினாலேயே மில்லி மீட்டர் அளவான ஒலி தடைகளை இடுவதற்கு உடன்படிக்கையின் அளவிடை பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை மதியுரை நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. | அதனால் இந்த விடயம் தொடர்பில் விபரங்களைப் பெற்றுத் தருமாறு அரச பொறியியல் கூட்டுத்தாபத்தினத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமையால் வழங்கப்படும் தெளிவுபடுத்தல் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பது. | |
| (இ) | பல்கலைக்கழகத்தின் வாஸ்து விஞ்ஞான பீடத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட விரிவுரை மண்டபத்துடனான மற்றும் கட்டிடம் மற்றும் பொறியியல் பீடத்திற்காக நிர்மாணிக்கப்படும் பல்நோக்கு கட்டிடத்தின் மதியுரையாளராக அரச பொறியியல் கூட்டுத்தாபனம் செயற்பட்ட போதிலும் மதியுரை பணிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாத காரணத்தால் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்புகள் மற்றும் நட்டங்களை அறவிடுவதற்கு உரிய தொழில் சார் பொறுப்பு தொடர்பில் காப்பீடு ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதியுரை சேவைகள் நிறுவனத்தினால் தொழில்முறை பொறுப்புக் காப்பீடு பெற்றுக்கொள்ளல் அவசியமானது என்பது. அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான உடன்படிக்கையின் பிரிவு இலக்கம் 04 இன் கீழ், மதியுரை நிறுவனத்தின் பொறுப்பு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப மதியுரை நிறுவனம் அதற்கு கடப்பட்டுள்ளது என்பது. | மதியுரை சேவைகளுக்கான தொழில்முறை பொறுப்புக் காப்பீட்டைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

**3.7 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிலவிய 316 வெற்றிடங்களை பூர்த்தி செய்ய முடியாது இருந்த காரணத்தால் வெளிவாரி விரிவுரையாளர்களை விரிவுரை பணிகளில் இணைத்து விரிவுரை கட்டணமாக மீளாய்வாண்டில் ரூபா 49,718,264 செலுத்தப்பட்டிருந்தது. | தகுதியான விண்ணப்பதாரர்கள் அந்தந்த பதவிக்கு விண்ணப்பிக்காததால், அந்தந்த வெற்றிடங்களை நிரப்ப இயலாதுள்ளதுடன், அதற்கமைய கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கு வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையை எடுத்துக்கொள்ள வேண்டும். | தற்போது வெற்றிடமாகவுள்ள கல்விசார் பதவியணியின் வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கு உரிய ஆண்டறிக்கை 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டுக்கு உரிய வரைபு ஆண்டறிக்கை 2024 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கு உரிய அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து பணிகளும் நிறைவு செய்யப்பட்டு கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வரைவு ஆண்டறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |